# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## இரண்டாம் பருவம்

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2022**

**C031 தமிழகப் பண்பாட்டு வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. குமரிக்கண்டம் எங்கு இருந்தது?
2. தமிழ்நாட்டில் முதன் முதல் முத்திரை நாணயங்களை வெளியிட்டவர் யார்?
3. பதிற்றுப்பத்து எந்த அரசர்களைப் பற்றிப் பாடப்பெற்றது?
4. கண்ணகி மதுரையில் யாரிடம் அடைக்கலம் ஆக்கப்படுகிறாள்?
5. யானை விடியும் வரை கதிர்களை உண்ணாமல் இருந்தது ஏன்?
6. சைவ சமய மெய்ப்பொருள் யாது?
7. சமண இலக்கியங்களில் குறிப்பிடத்தக்க இரண்டினைக்கூறுக.
8. நாயக்கர் காலச் சாதிப் பிரிவுகள் யாவை?
9. வ.உ.சி. அந்நிய ஆட்சியை எதிர்க்க என்ன செய்தார்?
10. திரு.வி.க. நடத்திய பத்திரிகைள் யாவை?
11. தமிழர் பண்பாட்டின் வீழ்ச்சிக்குரிய மூன்று ஆசைகள் எவை?
12. முதற் கற்கோயிலைக் கட்டிய பல்லவ மன்னன் யார்?
13. தமிழின் முதல் இலக்கண நூல் எது? அதை இயற்றியவர் யார்?
14. வீரமாசத்தி என்பவர் யார்?
15. வணிகப் பொருள்களை எவற்றின் மீது ஏற்றிச் சென்றனர்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. பழமொழி எத்தகைய பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்தும்?
2. அலர்தூற்றுதல் என்பது யாது?
3. தமிழகத்தின் பழமையான ஓவியங்கள் எவை?
4. இசுலாமியர் தமிழை வளர்த்த பாங்கை எடுத்துரைக்க.
5. சிற்றிலக்கியங்கள் யார் மீது எதற்காகப் பாடப்பெற்றன?
6. தமிழகம் அயல்நாட்டோடு செய்த வணிகம் பற்றி எழுதுக.
7. கலைவல்லார் பெற்ற சிறப்புப் பட்டங்கள் யாவை?
8. அடிமைகளை எவ்வாறு விற்றனர்?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) பண்பாட்டு வரலாற்று மூலங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஐம்பெருங்காப்பியங்கள் குறித்து கட்டரை தருக.

2. (அ) நாயக்கர் கால அரசியல் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஐரோப்பியர் காலப் பண்பாடு குறித்து எழுதுக.

3. (அ) புலவர்களும் உரையாசிரியர்களும் குறித்து கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) பழங்கால சமூக அமைப்பு குறித்து எழுதுக.

❋ ❋ ❋